கிற வகையில் நான் பணியாற்றுவேன் என்கிற உறுதியை உங்களுக்குத் தெரிவித்து, அந்தவகையில் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் எனக்கு இருந்திட வேண்டும். அதைப்போல இந்த அவையினுடைய ஓர் அங்கமாகத் திகழ்கிற பத்திரிகையாளர்களுடைய ஒத்துழைப்பும் இருந்திட வேண்டும் என்கிற வேண்டுகோளையும் தெரிவித்து, என்னை இந்த மிக உயர்ந்த இடத்தில் அமர்த்தியிருக்கிற மாண்புமிகு, எங்களை எல்லாம் வழி நடத்திச் சென்று கொண்டிருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் உங்கள் அனைவருக்கும், மீண்டும், மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி அமைகிறேன். அனைவருக்கும் நன்றி, வணக்கம்.

11-50 மணி

5. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வினாக்களுக்கான அறிவிப்புகள் வரப்பெறின், அவை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பெறும். விடைகள் வருவதற்குச் சற்றுக் காலதாமதம் ஆகுமெனக் கருதுகிறேன். எனவே 5—7—1991 ஆம் நாள் முதல் சில நாட்களுக்கு ''வினாக்கள்-விடைகள்'' நேரம் இருக்காது என்பதை அறிவிக்கின்றேன்.

ஏற்கெனவே அறிவித்தபடி, நாளை, 4—7—1991 காலை 11 மணிக்குப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 5—7—1991 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை 11-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—எதுவுமில்லை.